தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனர்

தி. பி. 2018 கடகம் - கன்னி (23-8-1987) 85 காசுகள் (இதழ் எண்: 90)

0 தமிழ் வழிபாட்டிற்கு உச்சநெறி மன்றத்தில் 13 ஆண்டுகளாய்த் தடை!

0 தடையை நீக்க உ.த.மு.க.வும் திராவிட சமய இயக்கமும் வழக்குத் தொடுத்தன!

0 வழக்கை உச்சநெறி மன்ற நடுவர் ஏற்றார்!



0 வரலாற்றில் முதன்முதலாகப் பாவலரேறு உச்சநெறி மன்றத்தில் தமிழில் பேசினர்!

தமிழ் நாடு அரசு (திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில்) தமிழகக் கோயில்களில் தமிழ்மொழியையும் வழிபாட்டு மொழியாக, ஒரு சுற்றறிக்கை வழி, நடைமுறைப் படுத்த 5-7-1971-இல் கட்டளையிட்டது. அதை எதிர்த்து, அதே ஆண்டு செப்டம்பர் மாதத்தில் தமிழகத்தைச் சேர்ந்த இருவர், சென்னை உயர்நெறி மன்றத்தில் (High Court) அதைத் தடைசெய்யக் கேட்டு ஒரு வழக்கைப் போட்டனர்.

அவர்களுக்குச் சார்பாக, திருப்பெரும்புதூரில் உள்ள எத்திராசு இராமானுச சீயர் மடத்தின் தலைவரும், காஞ்சிபுரத்தில் உள்ள ஞானப்பிரகாச தேசிக மடத்தின் தலைவரும் சென்னை உயர்நெறி மன்றத்தில், தமிழக அரசு கொண்டுவந்த தமிழ் வழிபாட்டை எதிர்த்து, ஆளுக்கொரு முறையீட்டை வழக்காகத் தொடுத்தனர்.

இவர்களுடன், சென்னையைச் சேர்ந்த மற்றொருவர் தமிழக

(தொடர்ச்சி 3-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

ஐயோ தமிழகமே!

வறட்சியை வளர்க்கும் மரங்கள்!

தமிழ்நாடு வரவர ஒரு பாலை நிலமாகிக்கொண்டு வருகிறது. திட்டமிட்டு வறள வைப்பது போல் வறட்சியை ஏற்படுத்தும் மரங்கள் நடப்படுகின்றன. தூர்ந்த ஏரிகளைச் செப்பம் செய்யாமல் செயற்கைக் காடுகள் என்ற பெயரில் நீலமலை மரங்கள் நடப்பட்டு நிலத்தடி நீர் உறிஞ்சப்படுகிறது. உழவர்கள் நீரின்றித் தொல்லைப்பட்டுக் கொண்டு வேறு கூலி வேலை தேடி அலைகின்றனர். படித்த உழவர் குடும்பத்து இளைஞர்கள் நகரங்களுக்கு வந்து, அலுவலகங்களையும் தொழிலகங்களையும் நாடுகின்றனர். இந்நிலையில் மேலும் நீலமலை மரங்கள் நடுவதற்கு அரசு வெளிநாட்டுக் கடனை வாங்கி வாரி வழங்குகிறது. சருக்கரை பூசிய நச்சு மாத்திரைகளை மக்களுக்கு வழங்க அரசும் முன்னிலையில் நிற்க வேண்டுமா?

தெலுங்கு கங்கைத்திட்டம்!

ஆந்திராவில் ஓடும் கிருட்டிணு ஆற்றின் நீரை சென்னைக்குக் கொண்டு வருவது என்ற திட்டத்தைப் பெரிய ஒரு விழாவாகவே கொண்டாடி விளம்பரப் படுத்தியது, தமிழ்நாடு அரசு. அன்றே தண்ணீர் வந்தது போல் அளவற்ற கோலாகுலம்! ஆனால் அடுத்த நாள் அந்தத் திட்டம் எங்கு போய் விழுந்ததோ? அரசு இதுபற்றி என்ன ஆயிற்று என்று கூட கேட்கவில்லை. 'தமிழ்நாட்டு அரசுதான் தொகை ஒதுக்கவில்லை. அந்த அரசை தமிழ்மக்கள் மன்னிக்க மட்டார்கள்' என்று இரக்கங் கூறிப் பேசினர் ஆந்திர நாட்டு அமைச்சர் ஒருவர். நடுவணரசோ கையை நன்றாகக் கழுவியே பேசியது. நடுவண் நீர் வளத்துறை அமைச்சர் சங்கரானந்து பேசும் போது, "இரு மாநிலங்களுக்கிடையே உள்ள பாசனச் சிக்கலைத்தீர்ப்பது நடுவணரசின் கடமையன்று'' என்று கூறிவிட்டார். மராட்டியமும் கருநாடகமும் இப் பாசனத்திற்குத் தெரிவித்த எதிர்ப்பை விலக்கிக் கொள்ளவில்லை. ஆந்திர நாடு வெளிப்படையாக ஒருதலையாகவே இத்திட்டப் பணிகளைச் செய்து வருகிறது. இந் நிலையில் தமிழ் நாட்டரசு வாய்மூடித் தனமாக அரசு நடத்துவது பெயருக்குத்தானோ?

மழை வேண்டி வேள்வி!

பருவ மழை ஆண்டு தோறும் வழக்கம் போல்தவிர்ந்து வருகையில் கோடை மழையு மில்லாமல் தமிழ்நாடே வறண்டு அந்த வறட்சியைத் தாண்டும் நிலையில் ஆங்காங்கு மழை முகில்கள் இடையிடையே இரக்கம் காட்டத்தொடங்கிவிட்டன. மக்களின் நலிவைப் பயன்படுத்தி, சமயத்தைப் பரப்ப எண்ணும் சமயப் பெருமகர்கள்-மூட நம்பிக்கையின் மொத்த விற்பனையாளர்கள் கருமுகிலைக் கண்டு விட்ட பின்பு விரைவு விரைவாகத் தங்கள் மூட்டைகளைக் கட்டிக் கொண்டு ஒன்றாக வந்து மழை வேள்வி நடத்துகின்றனர். குன்னக்குடியும் வந்து வேள்விக்கு விளம்பரம் இசைக்கிறது. மழையின் பெயரால் சமயத்திற்கு விளம்பரம் செய்வது தானே இதன் பொருள்.

மழையால் செழிக்கும் "செயற்கை மழைவாரியம்''

மழை முகில்கள் கூடி வந்து ஒரு நாள் இரவு மழையைப் பொழிந்தன. அடுத்த நாள், செயற்கை மழை பெய்வதற்குப் பொறுப்பெடுத்துக் கொண்ட வாரியத்தின் அறிவிப்பு- "நேற்றை இரவு பெய்த மழை செயற்கை மழைதான். நாங்களே மழையைப் பொழிவித்தோம்''. இது வெளிப்படையான அறிவிப்பு. யார் சரி பார்ப்பது? அது போகட்டும். இந்த மழையைப் பொழிவிப்பதற்கான செலவுகளாய் கணக்கு ஏற்றப்பட்டன. மொத்தத்தில் வாரியத்தில் வீற்றிருப்பவர்கள் காட்டிலெல்லாம் மழை! மழையால் நாடு வளம் பெறுகிறது(!)

விடுதலையால் மண் புனிதமானது!

இந்திய விடுதலைக்காகப் பாடுபட்டு இன்னும் உயிருடன் உள்ள ஈகி (தியாகி)கள், தாங்கள் பெற்ற விடுதலையை எண்ணிச் சலித்துக் கொண்டு விடாதபடி இந்திய அரசு ஒரு நாடக நிகழ்ச்சி நடத்தி அவர்களை மகிழ்வூட்டியது. முதலில் ஈகிகள் அனைவரையும் தேடிப் பிடித்தது. போராட்டம் நடந்த இடங்களிலிருந்து அவர்கள் அந்த இடத்தின் மண்ணை எடுத்துக் கொடுக்க வேண்டும். இதுதான் நிகழ்ச்சி. அந்த ஈகிகளும் தங்கள் நைந்து போன கைநூல் தலைக்கவிப்பு (கதர் குல்லர்)களை எடுத்து, மூட்டைப் பூச்சிகளை உதறிப் போட்டுக் கொண்டு, விடுதலையாகச் சென்று, போராட்டம் நடந்த இடத்தினின்று எடுத்து அனுப்பினர். ஈகிகள் நன்றாகப் போராட்டம் நடத்தி மண்ணைத்தான் கவ்வினர் என்பதைக் குறிக்கத்தான் இந்நிகழ்ச்சியோ?

சம 'பந்திப் போசனம்'

சிறிது காலமாகவே 'சம பந்தி போஜனம்' என்னும் பெயரில் தமிழ்நாட்டில் நடப்பது, ஒவ்வொரு சிறப்பு நிகழ்ச்சியோடும் இணைந்து நடத்தும் ஒரு புதிரான நிகழ்ச்சி யாகும். சமய நிறுவனங்களும் பொது நிகழ்ச்சிகளுடன், அரசுங் கூட இந்த நிகழ்ச்சியை விளம்பரப் படுத்தி நடத்துகின்றன. இந்த ஆண்டு விடுதலை நாளிலுங் கூட அந் நிகழ்ச்சி பல்வேறு இடங்களில் நடத்தப் பெற்றது.

சாதி வேறுபாடு, பொருளியல் ஏற்றத் தாழ்வு இவற்றைச்

(தொடர்ச்சி 11-ஆம் பக்கம்)

(முன் பக்கத் தொடர்ச்சி)

அரசு செய்திருந்த ஏற்பாட்டை வரவேற்றும் அது சரியென்று ஒப்பியும், அரசுக்குச் சார்பாகத் துணை முறையிடு ஒன்றையும் உயர்நெறி மன்றத்தில் கொடுத்தார்.

உச்சநெறிமன்றத்தில், அரசுக்குச் சார்பாக, 'தமிழகக் கோயில்களில் சமசுக்கிருத வழிபாட்டுடன், செய்பவர்கள் விரும்பிக் கேட்டால் தமிழ் வழிபாடும் செய்யலாம்; அதில் தவறில்லை' என்றொரு தீர்ப்பு வழங்கப்பட்டது. எனவே சிறிது காலம் தமிழ் வழிபாடும் தமிழகக் கோயில்களில், கேட்பவர் விருப்பத்திற்கேற்ப, நடைபெற்று வந்தது.

அதன் பின்னர், 1974-இல் இந்நடைமுறையை எதிர்த்தும், தமிழகக் கோயில்களில், தமிழில் வழிபாடு செய்யக்கூடாது என்றும், தமிழ் மொழி சமசுக்கிருத மொழிபோல் இறைவழிபாட்டுக்குத் தகுதியுடைய மொழி ஆகாது என்றும், ஏற்கனவே தொடங்கியுள்ள தமிழ் வழிபாட்டிற்குத் தடையிட வேண்டும் என்றும், தில்லி, உச்ச நெறி மன்றத்தில் (Supreme Court) தில்லியைச் சேர்ந்த எம். எல், சோந்தி என்பவரும் இராமேசுவரத்தைச் சேர்ந்த மடத்தலைவர் ஒருவரும், மற்றும் வேறு நால்வரும், ஒரு முறையீட்டைச் செய்தனர்.

இம் முறையீட்டை ஆராய்ந்த உச்சநெறி மன்ற நடுவர்கள் மதிதகு. டி. சி. பலேகர், கே. கே. மேத்யூ, ஒய். வி. சந்திரசூட், பி. என். பகவதி ஆகிய நால்வர் அடங்கிய நடுவர்குழு, தமிழ்நாடு அரசின் தமிழ்வழிபாட்டுக்கு இடைக்காலத் தடையிட்டு, இந்த வழக்கில் தீர்ப்புக் கூறும் வரை தமிழகக் கோயில்களில் முன்னர் பின்பற்றி வந்த நடைமுறையே தொடர வேண்டும் என்று ஆகத்து 1974-இல் தீர்ப்பு வழங்கியது.

ஆனால், கோயில்களில் தமிழ் வழிபாட்டை நிறுத்தி வைக்கப்பெற்ற அந்த வழக்கு நடைபெற்றதா எனில், அதுதான் இல்லை.

அந்தத் தடை, கடந்த 13 ஆண்டுகளாகத் திரும்பத் திரும்ப புதுப்பிக்கப்பெற்று, இன்றுவரை இருந்தே வருகிறது. வழக்கும் நடந்தபாடில்லை. வழக்கு நடைபெறாமல் பார்ப்பனியம் பலவகையான மறைமுக சூழ்ச்சிகளையும் தொடர்ந்து செய்து வருகிறது.

இந்நிலையில், இவ்வழக்கை நடத்த வேண்டும் என்றும், தமிழகக் கோயில்களில் தமிழிலும் வழிபாடு செய்வதற்கு உச்ச நெறிமன்றம் இட்ட தடையை நீக்கி மீண்டும் தமிழ்வழிபாடு நடைபெறச் செய்ய வேண்டும் என்றும், இவ் வழக்கில் தமிழ்நாட்டு அரசுக்குச் சார்பாகத் தங்களையும் எதிர் வழக்காளர்களாக ஏற்றுக் கொண்டு, தங்கள் கருத்துகளையும் உச்ச நெறி மன்றம் கேட்டு முடிவு செய்ய வேண்டுமென்றும் உலகத்தமிழின முன்னேற்றக் கழகத்தின் சார்பில் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களும், சென்னை கிறித்துவக்கல்லூரிய பேராசிரியரும், திராவிட சமய ஆராய்ச்சி நடுவத்தின் அமைப்பாளரும் ஆன பர். மு. தெய்வநாயகம். க.மு. அவர்களும், தனித் தனியாக இரண்டு முறையீடுகளைத் தில்லி உச்ச நெறி மன்றத்தில் கடந்த 21-11-86 -இல் தொடுத்தனர்.

பல வகையான வினுக்களுக்கும் ஆய்வுகளுக்கும் பின்னர் இம் முறையீடுகளை ஏற்றுக் கொள்வதா வேண்டாவா என்னும் முதல் உசாவல், கடந்த 13-8-87-இல், உச்ச நெறி மன்றத்தில், நடுவர். மதிதகு. அரங்கநாத மிசரா அவர்களின் கேட்புக்கு வந்தது.

இவ்வழக்கைத் தொடுப்பதற்குத் தொடக்கத்தில் பாவலரேறு அவர்களுக்கு உதவியவர் சென்னை, உயர்நெறிமன்ற வழக்கறிஞரும், மக்கள் உரிமைக் கழகத்தின் தலைவரும் ஆகிய உயர்திரு. பி. வி, பக்தவத்சலம் அவர்கள் என்றாலும், பாவலரேறு அவர்களே இவ்வழக்கில் உச்ச நெறி மன்றத்தில் நேரிடையாகத் தூய தமிழில் வழக்காடவும், அவர் தருக்கத்தை, சென்னை, உயர்நெறி மன்ற வழக்கறிஞர் உயர்திரு. பி. ஆர். சி. பொன்னழகன். க. மு; ச. இ. அவர்கள் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கவும், உச்ச நெறி மன்றத்தில் இசைவு வாங்கப் பெற்றது.

பேரா. உயர்திரு. மு. தெய்வநாயகம் அவர்களுக்காக, உச்ச நெறி மன்ற வழக்கறிஞர் உயர்திரு. மு. வெங்கடேசபெருமாள். க. மு; ச. இ. அவர்கள் வழக்காடினர்.

இருவருக்கும் சட்டத்துறை உதவியளிக்க சென்னை, உயர்நெறி மன்ற வழக்கறிஞர் உயர்திரு. நல்லப்பன் அவர்களும், பாவலரேறு அவர்களுடன் தென்மொழி. நா. இளமாறன், மா. பொழிலன் ஆகியோரும் தில்லி வந்திருந்தனர்.

13-8-87 அன்று வியாழக்கிழமை சரியாக 1 மணிக்கு, உச்ச நெறி மன்றத்தில் அனைவரும் வழக்கு மன்ற அறை எண் 8-இல் கூடியிருந்தன. பேரா. உயர்திரு. மு. தெய்வநாயகம், தென்மொழி நா. இளமாறன், மா. பொழிலன் ஆகிய மூவரும், வழக்காடு அறையில் பார்வையாளர் பகுதியில் அமர்ந்திருந்தனர். நடுவர் மதிமிகு அரங்கநாத மிசரா குறித்த நேரத்தில், நடுவர் இருக்கையில் வந்தமர்ந்தார்.

தமிழ் வழிபாட்டை எதிர்த்து வழக்குப் போட்டவர்கள் சார்பாக தில்லி, உச்ச நெறி மன்ற வழக்கறிஞர் திரு. ஏ பி. எம். சம்பத்தும் அவருக்குத் துணையாக வேறு இரண்டு வழக்கறிஞர்களுமாக வருகை தந்திருந்தனர்.

(தொடர்ச்சி 10-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

இந்திய அரசியல் அகராதி!

- குன்றன் -

அமைச்சர்: (அ) - கட்சிகளால் அறிமுகப் படுத்தப் பெற்று, அதன் பின் சுவரொட்டிகளால். முகத்தையும், பெயரையும் விளம்பரப்படுத்திக் கொள்பவர்,

(ஆ) - தன் கட்சியைத்தவிர தனக்கென்று எந்தக் கொள்கையையும் வைத்துக் கொள்ளக் கூடாதவர்.

(இ) - முதன்மை அமைச்சராலும் கட்சித் தலைவராலும் அமைச்சராக உயிரூட்டப்படுபவர். அதேபோல் தனிப்பட்ட சிறு பிணக்குகளால் கூட எந்த நிமையமும் பதவியை இழக்க அணியமாக இருப்பவர்.

(ஈ) - பதவியில் அமரும் போதே விலகல் மடலையும் ஒப்படைத்து விட்டுப் பதவியின் ஒட்டில் அமர்ந்திருக்க வேண்டியவர்.

(உ) - தேர்தல் நேரங்களைத்தவிர கட்சிக் கூட்டங்களிலும் அரசு விழாக்களிலும் மட்டும் மக்கள் முன் தோன்றுபவர்.

(ஊ) - பதவிக் காலம் முழுவதும் உடன்காவல் தளையில் சிறைபட்டிருப்பவர்.

(எ) - எதிர்க்கட்சியைத் தரக்குறைவாக திட்டித்தீர்ப்பதன் வழியும், தன் தலைவரைப் பொருளற்றுப் புகழ்ந்து குவிப்பதன் வழியும் தம் பதவியைக் காத்துக் கொள்பவர்.

(ஏ) - பதவி போனால் செல்லாக்காசாக ஆகி விடுபவர்.

(ஐ) - தம் கட்சியே ஆட்சியிழக்கும் நேரத்தில் எதிர்க்கட்சியில் சேர்ந்தாவது அமைச்சராகும் முயற்சியில் ஈடுபடுபவர்.

கட்சி: (அ) - தொழில், மதம், சாதி என்ற பல வகைப் பெயர்களால் பிரிந்து சலித்த மக்கள் அரசியல் காரணமாகப் புதிய பெயர் வைத்துக் கொண்டு பிரிந்து கொள்ளும் அரசியல் சாதி அமைப்பு.

(ஆ) - தன் சாதி மக்கள் அரசியலில் ஈடுபட அமைத்துக் கொள்ளும் பெயர் மாற்றம்.

(இ) - நேரத்திற்குத் தகுந்தாற்போல் ஒன்றிலிருந்து மற்றொன்றிற்கு எளிதில் மாற்றிக் கொள்ளும் வகையில் அமைத்திருக்கும் அரசியல் அமைப்பு.

(ஈ) - இவற்றிற்கு நிலையான கொள்கைகள் உண்டு! அந்த நிலையான கொள்கைகள் இடத்தையும் காலத்தையும் மிகவும் மதித்து வளையக் கூடியன.

(உ) - இவற்றின் கொள்கைகளை விட, கொடிகளும், குறியீடுகளுந்தாம் முகாமையானவை.

(ஊ) - மக்களையும், நாட்டையும் ஏமாற்றிப் பிழைப்பது எவ்வாறு என்று தொண்டர்களுக்குக் கற்பிக்கும் முதல் அரசியல் பள்ளி.

(எ) - இதன் வளர்ச்சி நிலைகள்தாம் மாநிலக் கட்சி, அனைத்திந்தியக்கட்சி, ஆளுங்கட்சி, எதிர்கட்சி என்பன.

மாநிலக்கட்சிகள்: (அ) - அறிந்தோ அறியாமலோ ஒரு தேசிய இனச் சிக்கலைத் தீர்ப்பதற்காக எழுந்த அரசியல் கட்சிகள்.

(ஆ) - தேசிய ஒருமைப்பாட்டில் ஈடுபாடில்லாமல் வளைந்துமட்டும் கொடுக்கும் கொள்கையாக இருக்கும் கட்சிகள்.

(இ) - தேர்தல் நேரத்தில் தனியாகவோ, தனது கொள்கைக்கு மாறுபட்டிருந்தாலுங் கூட பிற கட்சியுடன் கூடிக் கொண்டோ வெற்றியைக் குறிக்கோளாக வைத்தே போட்டியிடும் தன்மையுடையன.

அனைத்திந்தியக் கட்சிகள்: (அ) - இந்தியா முழுவதையும் பிடித்து விடவேண்டும் என்ற ஒரே குறிக்கோளுடன் இயங்கும் கட்சிகள்.

(ஆ) - இந்தியை முதன்மையாகக் கொண்டு இந்திபேசும் மக்களுக்கு முதல் நலனாக இருக்கும் கட்சிகள்.

(இ) - இந்தியா வெள்ளையரிடம் அடிமைப்பட்ட வரலாற்றைக் கூறிக் கூறியே தம் கட்சியை மக்களிடை நிலைக்க வைக்க முயன்று கொண்டிருக்கும் கட்சிகள்.

(ஈ) - தேர்தல் என்று வந்து விட்டால், வெற்றி பெறும் என்று கருதிவிட்டால், ஒரு சுண்டைக்காய் கட்சியுடன் கூட கூட்டணி வைத்துக் கொள்ள முயலும் கட்சிகள்.

(உ) - ஆங்கிலேயர் இருந்த இடத்தைத் தாங்கள் தக்கவைத்துக் கொள்வதென்ற வேட்கையுடன் போட்டியிடும் கட்சிகள்.

ஆளும் கட்சி: (அ) - இது நாட்டுக்காக, மக்களுக்காக, உழைக்கும் கட்சி என்று மக்களால் நம்பப்படும் கட்சி.

(ஆ) - தேர்தல் சந்தையில் அதிக மக்களை விலைக்கு வாங்க முடிந்த திறமை மிக்கக் கட்சி.

(இ) - இதில் இருப்பவர்கள் அனைவரும் உண்மையானவர்கள், நேர்மையானவர்கள், என்று சட்டத்தைக் கொண்டு போர்த்திக் கொள்ளும் கட்சி.

(ஈ) - மொத்தத்தில் மக்களின் மெலிவைச் சரியாகக் கணக்கிட்டுப் பயன் படுத்திக் கொள்ளும் கட்சி.

(தொடர்ச்சி 11-ஆம் பக்கம்)

இந்திய ஆரியத்தின் போலிப் பெரும்பான்மை!

பல தேசிய இனங்களும் பல தேசிய மொழிகளும் அமைந்திருக்கின்ற கூட்டுத் தேசிய நாடே இந்தியா என்னும் துணைக் கண்டம்.

இதில் ஒரே ஓர் இனம்—அதிலும் நூற்றுக்கு மூன்று விழுக்காடே உள்ள இனம் ஆட்சியில் அமர்த்தப் பெற்று, நாற்பது ஆண்டுகளாகத் தொடர்ச்சியாக மற்ற தொண்ணூற்றேழு விழுக்காடு மக்களும் ஆளப்பட்டு வருகிறார்கள் என்றால், இது குடியரசு அமைப்புக்கு எவ்வாறு பொருந்தி வருகிறது? இதிலும் இந்தியா அனைவர்க்கும் சம உரிமையுள்ள நடுநிலை நாடு என்று கூறிக் கொள்வது எங்ஙனம் பொருந்தும்!

இந்த ஒரே கேள்வியின் விடையே இந்தியாவில் உள்ள அனைத்து உள் நாட்டுச் சிக்கல்களுக்கும் மறைமுக, வெளிப்படையான காரணமாக அமையலாம்.

இனம், மொழி, நாட்டமைப்பு, பொருளியல், கலை, பண்பாடு, கல்வி, சமயம், மதம் எனப் பற்பல வேறுபாடுகளை இந்தியா தன்னகத்தே கொண்டு இயங்குகிறது. இத்தனையும் உள்ளடக்கி அனைத்துத் தேசிய இனங்களும் சம உரிமை பெறும்படியான ஓர் அணுகு முறையை இந்த அரசு செய்ய முனையவே இல்லை. அதற்கு மாறாக, இத்தனை வேறுபாடுகளையும் ஒன்று கூட்டி அனைத்தையும் அழுத்தி விட்டு, ஆரிய மொழி, இனம், கலை, பண்பாட்டை இந்தியாவின் தேசியத் தன்மை வாய்ந்ததாக எடுத்துக் கொண்டு, அதன் மேம்பாடு ஒன்றையே குறிக்கோளாக வைத்து, ஆண்டு வருவதால்தான் பல வகையான உள் நாட்டுச் சிக்கல்கள் தொடங்கின.

இது உலகத்தில் உள்ள இனங்களின் பொதுவான படிநிலை வளர்ச்சியின் இயல்பூக்கத் தன்மையே ஆகும். இவ்வாறு எழும் கிளர்ச்சிகள் தம் குறிக்கோள்களை எய்தாமல் முடிவு பெறா.

இந்த வகையான கிளர்ச்சிகளை அடக்கத்தான் இந்தியாவில் இப்போது அரசு பல்வேறு முயற்சிகளைப் பல்வேறு வகைகளில் ஆங்காங்கு செய்து கொண்டிருக்கிறது. இதன் முயற்சிக்கு எத்தனை இருட்டடிப்புகளை வேண்டுமானாலும் எத்தனை அழிவுகளை வேண்டுமானாலும் அரசு செய்யக் காத்திருக்கிறது; செய்து கொண்டுள்ளது. மெல்ல மெல்ல இந்தக் குடியரசு அமைப்பையே விட்டுக் கொடுத்து வல்லதிகாரத் தன்னாட்சி கொண்டதாயினும், இந்த இந்தியாவைத் தன்னுள் ஒடுக்கி கொண்டு வந்து விட வேண்டும் என்ற அறிக்கைகளை வெளிப்படையாகவே விட்டுக் கொண்டும், செயல்களை அதற்கும் மேலாக வன்மையாக்கிக் கொண்டும் உள்ளது. இந்தியாவின் எந்தத் தேசிய இன உரிமை கோருவதையும் பிரிவினைக் கருத்தாகவே விளம்பரப் படுத்தி நசுக்குகிறது. ஆரிய இன மேம்பாட்டையே இந்திய ஒற்றுமையாக்கமாகப் பரப்பி வரவேற்கிறது.

இந்த ஆரிய இனம்தான் மூன்றே விழுக்காடாக இருந்து கொண்டு, எவ்வாறு இச் செயல்களை நடத்திப் பெரும்பான்மை இனம் போல் தோற்றமளிக்க முடிகிறது?

பல்வேறு தேசிய இன மக்களின் மெலிவைச் சரியாகப் புரிந்து கொண்டு, அவர்களின் தன்னின உணர்வை மழுங்கடிக்கும் செயல்களையே இந்த ஆரிய இந்திய அரசு பல்லாண்டுக் காலம் செய்து வந்தது - வருகின்றது.

ஆரிய இனத் தனிமாந்தர்களும், சமயத்தலைவர்களும், அவ்வின அரசியல் தலைவர்களும் ஒரே நோக்கத்துடனேயே செயல்படுகின்றனர். அவரவர்களுக்கு இயலும் வகையில் தில்லிப்பூணூல் முதல் திண்ணையில் அமர்ந்து ஊர்க்கதை பேசும் ஊசைக் கிழப்பூணூல் வரை ஒரே திட்டத்துடன் இயங்குகின்றன.

சமய நம்பிக்கையை நாடுமுழுவதும் வளர்த்து அதன்வழி இன உணர்வைச் சிறியது படுத்திக்காட்டி மத நிலையில் இந்திய ஒற்றுமையைக் காப்பது என்பது இவர்களின் ஒரு திட்டம். இதனால் ஆரிய இனத்தின் பல தனிமாந்த வாழ்வுகள் மேம்படுகின்றன. அத்துடன் ஆரியத் தொன்மங்கள் (புராணங்கள்) பரவுவதோடு அல்லாமல் அவர்கள்-தாம் இந் நிலத்துக்குச் சொந்தக்காரர்கள் என்னும் போலி உணர்வைத் தோற்றுவிக்க முடிகிறது. சிவனிய - மாலிய மதங்களை ஒன்றாக்கி, இதுதான் ஆரிய மதமெனப் பரப்பி, இந்தியாவின் மிகப்பெரிய மதம் இந்துமதந்தான் என்றும், கிறித்துவர், முகமதியர் அல்லாதவர்களெல்லார்க்கும் இந்த மதந்தான் உரியது என்றும், புரட்டுப்பேசி இவர்கள் இந்தியாவில் மிகப்பெரிய அளவில் இருப்பதாகச் செயற்கையாக ஒரு போலிப் பெரும்பான்மையைத் தோற்றுவித்தவர்கள் இந்த ஆரியர்கள்.

இந்தப் போலிப் பெரும்பான்மை நாளடைவில் வீழ்ந்துவிடும். அதேபோல், படியாதார் நிறைந்த இந்த நாட்டில் இந்தியை நுழைத்து அதற்காக ஏராளமான செலவுகளைச் செய்வது எதிர்காலத்தில் இந்தியை வைத்துப் பெரும்பான்மையைத் திரட்டுவது என்னும் நோக்கத்திலேயே நடைபெறுகிறது. இப்போதே தொலைக்காட்சியில் 70 விழுக்காடு இந்தி நிகழ்ச்சிகள் இடம் பெறுகின்றன.

இவ்வாறு செயற்கையாக ஏற்படுத்தும் செயல் எதுவும் மக்களின் படிநிலை வளர்ச்சிக்குமுன் நிற்-

(தொடர்ச்சி 9-ஆம் பக்கம்)

சுரண்டும் நோக்கிலேயே பொழுதுபோக்குகளும்!

பொதுவாகவே பொழுதுபோக்குகள் என்பன ஏழ்மை நாடுகளில் முதலாளியத்தைச் சார்ந்தே அமைவது இயல்பு. இவ் வகையான பொழுது போக்குகள், பெரும்பான்மை மக்களுக்குப் பயன் படாதனவாகவும், வாழ்க்கைத் தேவைகளைப் பற்றிய சிந்தனைகளைத் திசைதிருப்புவதன் வழி, அவர்களின் மூளையை மழுங்கடிக்கும் தன்மையானவையாகவும், அதே நேரத்தில் மேல் நிலை மக்கள் இந்தப் பொழுதுபோக்கை அடிப்படையாகக் கொண்டே பிறரை ஏமாற்றுவதற்காகவும், ஊதிய நோக்கத்துடனும் அமைந்திருக்கும். இது வெளிப்படையாகத் தெரியாதிருப்பினும், அதனால் ஏற்படும் குழுகாயக் கொள்ளையடிப்புகள் ஏராளம்.

உழைப்பு என்னும் ஒன்றினால், தன்னை ஏனைய விலங்குகளினின்று வேறு படுத்திக் கொண்டு நிற்கும் மாந்தன், தன் முகாமையான பொருளீட்டத் தொழிலுக்கு மேல், தன் மன ஈடுபாடு காரணமாக, அறிவுழைப்பைக் குறைவாக்கிக் கொண்டு, மென்மையான கவனத்தோடு, மன மகிழ்வான நிலையில் மனத்தை ஈடுபடுத்தி மகிழவும் பிறரை மகிழ்வு படுத்தவுமான, அனைத்து நிலைகளும் பொழுதுபோக்கு எனக் கொள்ளலாம்.

பொழுது போக்கு என்பதை ஒரு கருவியாகக் கொண்டால் அதை நன்மைக்கும் அதே போல் தீமைக்கும் பயன்படுத்தலாம். உடல் உழைப்போர்கள் இப் பொழுதுபோக்கிற்கான உருவாக்கப் பணிகளில் ஈடுபட நேரமும் நாட்டமும் இரா. அவர்கள் அதைச் சுவைக்க மட்டுமே முடியும். எனவே இதை உருவாக்கம் செய்வதில் ஈடுபடுபவர்கள் அதிகார வகுப்பினரும் முதலாளிய வகுப்பினருந்தாம்.

எனவே இவ் வகுப்பினர் தங்கள் நலனிற்குத் தகுந்தாற்போல், உழைப்பவரின் மூளையை மழுங்கடித்து, அவர்கள் உணர்வு பெருதபடி, இப் பொழுதுபோக்கை அடிப்படையாகக் கொண்டு, மக்களின் சிக்கலை அணுகுவது போல், சிற்சில ஊடுறுவலை அமைக்கின்றனர். எனவே, பெரும்பான்மை மக்களின் உள்ளத்தைத் தொடுமளவில் மொழுதுபோக்குகள் பரந்துபட்டு அமைகின்றன. ஆனால் அவற்றின் ஒட்டு மொத்தப் பயனைத் துய்ப்பவர்கள் அதிகார — முதலாளியப் பிரிவினர்தாம்.

இத்தகைய பொழுதுபோக்குகள், இந்தக் கால கட்டத்தில் மட்டுமல்லாமல் மன்னராட்சியிலும் நிலக் கிழமையமைப்பிலும் மிகுதியாகப் புழக்கத்தில் இருந்தன என்பது, அந்தந்த இலக்கியத்திலும் வரலாற்றிலும் தெள்ளென விளங்கும் சான்றுகளில் காணலாம். இவை மேலோட்டமாகப் பார்க்கும்போது, குமுகாயத்திற்குப் பயன் விளைவிக்கக் கூடியனவாகவே, தோற்றமளிக்கச் செய்கின்றன. அதற்கு மூலமான காரணம், இப் பொழுதுபோக்குகள் மொழி, சமயம், கலைகளான இசை, நாடகம், விளையாட்டுகள் இவை போலும் மக்கள் உணர்வை எளிதில் பற்றக் கூடியவற்றையே கொண்டு அமைந்திருப்பதுதான்.

இவை, அக் காலத்திலும் இக் காலத்திலும் இவற்றின் அடிப்படையில் மாறாமல், வடிவம் மட்டும் மாறி, கலை வாழ்க்கைக்காகவே என்னும் நிலை பலவாறாகப் பேசப்பெறும் இப்போதையக் குடியரசு அமைப்பிலும், மிக நுட்பமாக, மக்கள் குமுக அமைப்பை ஏமாற்றித் தங்களை மறைத்துக்கொள்ளத்தான் பயன்படுத்தப் படுகின்றன.

அனைத்துலகிலும் இதற்கு எடுத்துக் காட்டுகளைக் கூறலாம். அதே நிலைகள் தமிழ் நாட்டிலும் இல்லாமல் இல்லை. இதை ஆட்டுவிக்கும் முதலாளிகள் அதிகார வகுப்பினர்க்கும் போலிப் பெரும்பான்மை மயக்கிற்கும் தகுந்தவாறு ஆட்டுவிக்கிறார்கள்.

ஒரு முதலாளி தான் ஓரளவிற்கு வளர்ந்தபின் ஒரு தொகையைத் தமக்குத் தொடர்பில்லாத ஏதாவது ஒரு பொழுதுபோக்கிற்காக ஒதுக்குகிறார். இது தொடக்க நிலையில் அவரின் தொழில் விளம்பரத்திற்காகப் பயன்படுகிறது. அதன் பிறகு தம் கணக்குகளுக்கு எட்டாத அவரின் சேமிப்பு இருட்டறையாகவே உருவெடுக்கிறது. இவ்வகையில் ஒரு பெரும் கொள்ளைக்கே இந்த அரசியல் அமைப்பு இடந்தருகிறது.

கருப்புப் பணம் வெளுக்கப்படுகிறது. நாட்டில் அவர் பெரும் புள்ளியாகிறார். அரசியல் அவரை அரவணைத்துக் கொள்கிறது. இத்தனை நன்மைகளும் அவரின் சொந்தத் தொழிலில் கிடைப்பதை விட அவரின் இத்தகைய பக்க ஈடுபாட்டில்தான் மிகுதியாக் கிடைக்கிறது. இதற்காக அவருக்கு எந்தக் கொள்கையும் இருக்கத் தேவையில்லை. தம் மொழி, இன, நாட்டைக் கடந்து இவரின் பற்றுதல் செல்லுகிறது. தம் இனத்தைத் தாமே நசுக்குவதைப் பற்றி இவர் உணர்வதில்லை.

'சமயம்' — இது ஒரு பெரிய இருள் கூடாரம். எந்தச் சட்டச்சிக்கலையும் இதில் மறைத்து விடலாம். தன்னையும் புனிதமாக்கிக் கொண்டு தம் கொள்ளையடிப்புகளையும் மறைத்து வைத்துக் கொள்ள சுரண்டல் வகுப்பினர்க்குக் கிடைத்த ஆயத்த குகை அமைப்புதான் இது.

இதே நோக்கத்துடன்தான் பார்ப்பனியம் இந்தியாவின் மிகப்பெரிய சமயத்தையே தன்னுள் அடக்கி வைத்துள்ளது. அவர்கள் தம் ஆளுமையை

இந்த நாட்டில் நாட்டிடத் தேர்ந்தெடுத்த சரியான கருவியும் இது. அந்தச் சமயம் பார்ப்பனியத் தொன்மக் குப்பை கூலங்கள், அறிவு மழுக்கிகள் நிறைந்த சாவா மருந்தாக உள்ளது. எனவே பெரு முதலைகள் பல உள் நுழைந்து வர வாய்ப்பாக அமைந்துள்ளது இச்சமயம். இதனால் ஆரியத்திற்கும் மொத்த ஊதியம்.

இலக்குமி துணியாலைக்காரருக்கு அட்ட இலக்குமி மேல் அளவுக்கு மிஞ்சிய பத்தி மேலிடுகிறது. சென்னையில் கோவில் கட்டி மகிழ்கிறார். பொள்ளாச்சியார் வடலூராரைத் தேர்ந்தெடுத்துக் கொண்டார். நாட்டு முன்னேற்றத்திற்கு உடனடித் தேவையான(!) விளையாட்டரங்கைச் சிதம்பரம் கட்டி ஏழ்மையை ஒழிக்கப் பாடுபட்டார்! இவர்களைத் தவிர தாங்கள் அடிக்கும் கொள்ளையில் ஒரு பங்கைத் திருப்பதிக்கு வழங்குவதில் எத்தனை முதலைகளுக்கு ஒப்பந்தம். மருவத்தூரில் எத்தனை மகிழுந்துகள் வந்து பங்கு பிரித்துக் கொண்டு மகிழ்கின்றன. காஞ்சியில்தான் அனைத்திந்திய வணிகம். இவையெல்லாம் சமயம் என்னும் ஒன்றில்லா விட்டால் இவ்வளவு பணம் எங்கெங்கிருக்கும் என்று ஒரே நிமையம் எண்ணிப் பார்ப்போமானால், ஏழைகளைச் சுரண்டிய பணம் சமயமாய் வளர்கிறது. சமயம் வளர்க்கவே பொது மக்களைச் சுரண்ட இந் நாட்டில் சட்டம் இட மளிக்கிறது.

இது மட்டுமல்லாமல் சுரண்டல் வகுப்பினர் தொட்டதெல்லாம் வளர்ச்சிதான். ஆனால் அவர்கள் தொடுவது அரசியலுக்குத் தொடர்பற்றதாகவும் ஆளுங்கட்சிக்குச் சாய்காலாகவும் பார்த்துத்தான் தொடுவார்கள். இதில், மொழியும் கூட விலக்கில்லை. எனவேதான் வடமொழிக்குக் கிடைத்த பேறு தமிழுக்குக் கிடைக்கவில்லை. பொள்ளாச்சியார் புகழ்ச்சியை வடமொழி பெற்றது. தாய்மொழித் தமிழோ அவர் கண்ணில் தாழ்ந்தது.

மொழி, அரசியல், கட்சி, கலை, விளையாட்டு என்று பல் வகைகளில், தங்களுக்குத் தொடர்பில்லாத வற்றிலும் கூட தங்கள் களத்தை அமைத்துக் கொண்டனர். அனைத்திந்திய வணிகம் கெட்டு விடாமல் இருப்பதற்கு எதையெதையோ பொருந்தியும் பொருந்தாமலும் கூறி ஒருமைப்பாடு பேசுகிறார்கள் இந்த முதலைகள். எந்தப் பெருமுதலையும் இந்த அனைத்திந்திய வணிகத்தை இழக்க முன் வருவதில்லை.

இந்திய ஒருமைப் பாட்டைப் போற்றி யெழுதும் மூன்று இதழாசிரியர்களுக்குப் பரிசு என்று ஒரு பெருமுதலை அறிவிக்கின்றது. அதையும் நம் **'தாய்'**மொழி இதழாசிரியர் ஒருவர் வெட்கமில்லாமலும் வாங்குகிறாரே!

எனவே இந்தியா குடியரசு என்ற பேரில் இயங்கும் முதலாளிய நாடாக ஆனதால், சுரண்டிய வற்றை வைப்பகங்களில் வைப்பதைக் காட்டிலும் அதிகக் காப்புடைய — அதிக ஊதிய வட்டியுடைய கணக்கு நெருக்கடிகளுக்கு நிலைகளை உருவாக்க இந்த முதலைகளும் பார்ப்பனியமும் சரியான வழிகளைத்தாம் கண்டு பிடித்து வைத்திருக்கின்றன. அவைதாம் இவை. அவர்கள் முதலில் கலையை வளர்ப்பதும், அந்தக் கலைகளாலேயே தாங்கள் வளர்வதும் பெரிய அளவில் பதுக்கல்களை அதிலேயே செய்வதும் சரியான சூழ்ச்சியே.

பல இலக்கங்களைக் கொள்ளையடித்தவன் பத்து நாளைக்கு ஒரு பூணூல் காவியை வைத்துக் காலப் போக்கு நடத்துகிறான். அவன் களங்கம் இந் நாட்டுக் குமுக அமைப்பில் துடைக்கப்பட்டு விடுகிறது. இன்னும் அறிவு வஞ்சக முதலைகள் பல துறைகளில் ஆராய்ச்சிக் கருத்தரங்கு கூட்டி அறிஞர்களை விலைக்கு வாங்குகின்றன. இவ்வாறு நடத்தப்பெறும் ஆராய்ச்சிக் கருத்தரங்கும் சமயக் காலப் போக்கும் ஒரே தரத்தவை. இவை ஒன்றேனும் ஆரியத்திற்கு மாறுபட்டதாக இராதே.

இந் நாட்டு முதலைகளின் அறிவு முயற்சி முதல் அனைத்துப் பொழுது போக்கு, கலை, சமய நடவடிக்கைகளும் சுரண்டலுக்கும் அதை மூடி மறைப்பதற்குமாகத்தான் அமைந்துள்ளன.

—புயலன்

நடமாடும் தெய்வம் என்று
விளம்பரப் படுத்தப் படும்
காஞ்சி காமகோடி பீடாதிபதியான

சங்கராச்சாரி - யார்?

அவர் ஒரு,

— பார்ப்பனிய வெறியர்;
— வைதீகப் பித்தர்;
— சாதி வெறியர்;
— குமுகாயப் பகைவர்;
— இந்துமதக் கொடுமையாளர்;
— பெண்ணுரிமைப் பகைவர்;
— தேவதாசி முறைக்கு ஆதரவாளர்;
— வர்ணாச்சிரமக் கொள்கையைத் தீவிரமாகக் கடைப்பிடிப்பவர்;
— தமிழின முன்னேற்றத்திற்குத் தடையாக இருப்பவர்;
— முதலாளிய, நிலவுடைமைக் கோட்பாட்டை வரவேற்கும் பூர்சுவா;
— சமநிலைக் குமுகாயத் தடைக்கல்;
— பொதுவுடைமைப் பகைவர்;
— அறிவியல் எதிரி.

—பெருஞ்சித்திரனார்

உழவர் பெருங்குடி மக்களே!

'உழவின்றி உலகில்லை'

—இதைச் சொல்லாதோர் யாருமில்லை

—ஆனால் உழவர்கள், குறிப்பாகத் தமிழ்நாட்டு உழவர்கள் நிலை உயர திட்டங்கள் வைத்திருக்கும் இயக்கங்கள் ஏதும் இல்லை.

—ஆற்றிலே நீரில்லை; ஆற்றுப் பாசனத்திற்கு வழியில்லை!

—குளங்கள் திட்டமிடப்பட்டுத் தூர்க்கப்பட்டன.

—நிலத்தடி நீரில்லை, கிணற்றுப் பாசனத்திற்கும் வழியில்லை. கடலோரப் பகுதிகளில், கடல்நீர் புகுந்துள்ளது.

—தொழில்வளம் என்றும், நகர மேம்பாடு என்றும் கட்டடங்கள் கட்டப்பட்டன.

—செங்கல் சூளைக்காகவும், நகர்ப்புற வசதிகளுக்காகவும் காடுகளும், மரங்களும் அழிக்கப்பட்டன.

—இதனால் மண் அரிப்பு ஏற்பட்டுச் சிற்றோடைகள் தூர்ந்து விட்டன.

—நீர்ப்பிடிப்பு நிலங்களும் அழிக்கப்பட்டுவிட்டன.

—வேதியல் உரங்கள் போடுவதால், அவற்றில் தங்குகிற உப்புகள், இருக்கின்ற குறைவான நிலத்தடி நீரையும் உவராக மாற்றுகிறது.

—பசுமைப் புரட்சி என்னும் பெயரில் பணப்பயிருக்கு உழவர்கள் ஆசை காட்டப்பட்டு ஏமாற்றப் படுகின்றனர்.

—தேவைக்கு ஏற்பவும், மண்ணிற்கு ஏற்பவும் உழு தொழில் செய்வதை விட்டுவிட்டு, அதிக விளைச்சல் என்று உரங்கள், பூச்சி மருந்துகள், மின் பொருள்கள், உழவுப் பொருள்கள் என்று உழு தொழில் செலவுகளை அதிகப்படுத்திக் கொள்ளும் நிலைக்கு உழவர்கள் தள்ளப்பட்டுவிட்டனர்.

—கடன் சுமை அதிகமாக ஆகச் சொந்த நிலங்கள் பொட்டல்களாகவும் இழப்புகளாகவும் மாறின.

—சிற்றூர்ப்புற நிலங்கள் பொட்டல்களாகவும் மாறுகின்றன. நகர்ப்புற நிலங்கள் வீட்டடி மனைகளாக மாற்றப்படுகின்றன.

—அனைத்துத் தொழில்களுக்கும்,

அடிப்படை உழுதொழில்தான் என்பதனை உழவர்களே மறக்கிற நிலைக்குத் தொழில்வளம் என்றும், எந்திர நிலையென்றும் பெரிதாக விளம்பரங்கள் செய்யப் படுகின்றன.

—உழுதவன் தணக்குப் பார்த்தால் உழக்குக்கூட மிஞ்சாது எனும் நிலைமாறி, உழவனே மிஞ்சாத நிலை இப்போது தமிழகத்தில் ஏற்பட்டுள்ளது.

—காவிரியில் தண்ணீர் இல்லை. வைகை வறண்டு கிடக்கிறது. தாமிரவருணியில் தண்ணீர் இல்லை. பாலாறு, மண்ணாறானது. தென்பெண்ணை, வடபெண்ணை, பொருநை - இவை இருக்கின்றனவா என்றே தெரியவில்லை.

—பன்னாட்டு முலப் பணங்களின் தாள் தொழிலுக்காக மரம் நடும் விழா நடத்தப்பட்டு, நடப்படுகின்ற சாவி, கருவேலம், நீலமலை (யூக்லிப்டசு) மரங்களால் காற்றிலுள்ள ஈரப்பசையும் உறிஞ்சப்பட்டுத், தமிழ்நாடு பாலைநிலமாகவே மாறிக் கொண்டிருக்கிறது.

—இப்பொழுது உடைகளுக்காகவும், விதை பொருள்களுக்காகவும், உரங்களுக்காகவும் அடிமைப்பட்டிருக்கிற நிலை மட்டுமல்லமால், இந்த நிலை நீடித்துக் கொண்டே சென்றால்,

தமிழ்நாடு உணவுக்காகவும் வடநாட்டு முதலாளிகளிடமும், பிறநாட்டவர்களிடமும் கையேந்துகிற நிலைக்குத் தள்ளப்படும்.

—இந்த நிலையினை மாற்றிட தன்னுடைய நிலம் தன்னுடைய மண், தன்னுடைய நாடு தன்னுடைய இனம் —என்கிற உணர்வோடு,

தமிழக உழவர்கள் ஒன்றிணைந்து, பிறர்க்கு உழைப்பதை விட்டுவிட்டுத் தமக்காகவும், தம் நாட்டுக்காகவும் உழைத்துத் தமிழ்நாட்டை வளப் படுத்துவோம்!

—இந்த ஆளுமைத் தனங்களை அறுத்தெறிந்து விட்டு உண்மையான நம் விடியலை நோக்கவே வாருங்கள் உழவர்களே! நமக்காக உழவு செய்வோம்! நமக்காக வாழ்வோம்!!

இதற்காக நாம் செய்ய வேண்டுவன:

- கைப்பற்றப்பட்ட குளங்கள் அனைத்தும், மீட்கப்பட்டு மழைக்கால நீர், தேக்கி வைக்கப்பட வேண்டும்.
- மழை வரவைத் தடுக்கிற, நிலத்தை வரள வைக்கிற, பன்னாட்டு முலப்பணங்களை வாழ வைக்கும், நீலமலை, சீமைக்கருவேலம், மரங்கள் முழுவதுமாக வெட்டி அழிக்கப்பட வேண்டும்.
- நீர் இறைக்கும் எந்திரங்களை நம்பியே வேளாண்மை செய்வதைக் குறைக்க வேண்டும்.
- ஆற்றுநீர், குளத்துநீர் வழி நீர்ப்பிடி நிலங்களின் வளத்திற்கு எதிராக மரம் வெட்டுவதையும், மண் அரிப்பையும் தடுக்க, வெளிமாநிலங்களுக்குச் செங்கல் அனுப்புவதை முழுமையாகத் தடுத்து, நம்முடைய தேவைக்காக மட்டும் ஆக்கம் செய்வோம்.
- ஆக்கப் பொருள்கள் இடு பொருள்கள் விலையின் உறுதிப்பாட்டை உழவர்களே தீர்மானிக்க வேண்டும்.

(தொடர்ச்சி 9-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

நம் பார்வையில்!

12-3-87 இல் தமிழக அரசு ஊழியர் ஆசிரியர் இயக்கங்களின் கூட்டுக்குழு கோரிக்கை ஆர்ப்பாட்டம் நடத்திற்று.

அதன் கோரிக்கைகளில் 'அரசின் பழிவாங்கும் நடவடிக்கையைக் கண்டிக்கும் கருத்து' உளது. அது தவிர,

'நடுவண் அரசு ஊழியர்களுக்கு இணையான ஊதியம் வழங்கு,' என்ற கோரிக்கை பற்றிய நம் பார்வை எப்படி உள்ளது?

மாநில அரசுகள் நடுவணரசினுல் புறக் கணிக்கப்படுகின்றன. அல்லது சமவுரிமை யற்றுக் கிடக்கின்றன- என்று இந்த இயக்கங்கள் மறைமுகமாக ஒப்புக் கொள்கின்றன! ஆனுல், அவை அவற்றுக் கான காரணங்களைப் பற்றி அக்கறையற்று உள்ளன.

ஒரு மாநிலத்தில்உள்ள — குறிப்பாகத் தமிழ் நாட்டில் உள்ள மக்களும் இயக்கங்களும், தங்களின் தேவை பற்றியும் கோரிக்கை பற்றியும் அறிந்தவர்களாக இருத்தல் வேண்டும்.

நம் வாழ்க்கைச் செலவுப்புள்ளிக்கான —அறிவியல் சார்ந்த—குமுக வுணர்வோடு கூடிய கோரிக்கைகளை எழுப்பும் அளவுக்கான இயக்க வளர்ச்சி இல்லை.

தமிழ்நாட்டு அரசியல், பொருளியல், பண்பாட்டுத் தேவைகளை அறிந்து கொண்டு கோரிக்கை எழுப்பாதவர் வெற்றி பெறுதலும், நேர்மையை நிறுவுதலும் முடியுமா?

தமிழ்நாட்டுப் பொருளியல், அரசியல், பண்பாட்டுத் தாக்கத்திற்கு நடுவணரசின் கொள்கை காரணமா என்பதை ஆராய்தலும் வேண்டும்!

நாம் நம் பிடியை நடுவணரசிடம் கொடுத்து விடுவதில் ஏற்படும் சிக்கல்களை உணர்தல் வேண்டும். ஏற்கனவே கோரிக்கைகளுக்காகக் காவடி எடுக்கும் இழிவுள்ளதை அறிவோம். இதனை அரசியல் கட்சிகளின் செயல்களின் மூலம் கண்டறியலாம்.

கோரிக்கைகள் 'தேசிய அளவில்' என்ற 'பொய்த்தேவி' பின் செல்லுதல் நன்று ஆகாது. 'தேசியம்' இங்குக் குழம்பிக் கிடக்கிறது. அதற்கான தெளிவு பெறுவோம்! அதேவேளை, வகுப்புப் போராட்டம் என்பது, தேசிய இன விடுதலையிலிருந்து பிரித்துப் பார்க்க முடியாதது ஆகும்! எனவே, நம் தேவைகளை நமது உண்மை வாழ்க்கைச் செலவினப் புள்ளிகள் அடிப்படையில் தீர் மானிப்பதே, வகுப்புணர்வு - தேசிய உணர்வு - ஆகும்!

வேறுபட்டும், புறக்கணிப்புக்குள்ளாகியும் உள்ள மாநிலங்கள், மாற்றுந்தாய் மனப்பண்பு நடுவணரசிடம் உள்ளதே ஏன் என்று காண்பதற்குரிய காலம் இது!

—பறம்பை அறிவன்

(8-ஆம் பக்கத் தொடர்ச்சி)

O அரசு வாங்கும் வெளிநாட்டுக் கடன்களுக்கான வட்டியைச் சுமக்கிறோம். அதற்கும் மேலாக வெளிநாட்டிற்கு மிகக் குறைந்த விலையில் செய் பொருள்களை வழங்குவதால் அந்த இழப்பையும் உழவர்களே சுமக்க வேண்டியுள்ளது. இதனுல் பொருள் செய்தவனே பல மடங்கு விலை கொடுத்துத்தான் தான் செய்த பொருளை வாங்க வேண்டி உள்ளது.

எனவே,

நம் தேவைக் கேற்ப முழுமையாகப் பயன்படுத்து கிற அளவு போக மீதியை மட்டும். உள் நாட்டு உறுதிப்பாட்டின் விலையைவிடக் கூடுதலாக வெளிநாட்டுக்குக் கொடுக்கச் செய்தல்.

O தமிழ் நாட்டின் வளமான பகுதிகளில், நாட்டின் நடுப் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள, தோல் பதனிடுதல், வேதியல் தொழில், தாள் தொழில் முதலியனவற்றின் கழிவுகள் நிலத்தை வளர வைத்துத் தமிழ் நாட்டைப் பாலைநிலமாக மாற்றுகிறது. அதன் கெட்ட நீர்கள் மக்களை நொண்டி, கூன், குருடுகளாக மாற்றுகின்றன.

—எனவே இத் தொழிற்சாலைகளை, கடலோரப் பகுதிகளுக்கும் வளமற்ற பகுதிகளுக்கும் உடனடியாக மாற்ற வேண்டும்.

—இதனுல் தாக்கப் பட்ட நிலத்தைச் சீர் திருத்துவதோடு தாக்கப் பட்ட உழவர்களுக்கும் இழப்பீடு கொடுக்க வேண்டும்.

O —தமிழ்மக்களின் உயிருக்கு உலை வைத்துத் தமிழ்நாட்டின் கடல்நீரைக் கெடுத்து மீன் வளத்தைக் கெடுத்து,

—வளமான தமிழ்நாட்டு நிலத்தை, தமிழ் நாட்டு மக்களை, பருவமழையை, பருவ காலத்தை மண்ணைத் தாக்கக் கூடிய, அறிவியல்துறையில் முன்னேறிய நாடுகள் புறக்கணித்ததுமான பல வேதியல் தொழிற் சாலைகள் தமிழ் நாட்டிலிருந்து அகற்றப் பட வேண்டும்.

—தமிழ் நாட்டு உழவர்களின் நலன்களுக்கான இத்தகைய சரியான போராட்டங்களை ஒன்றிணைந்து போராடி வெற்றி கொள்வோம்!

நன்றி: —**தமிழ்நாடு உழவர் பேரவை.**

(5-ஆம் பக்கத் தொடர்ச்சி)

காது. எனவே இது இயற்கைநிலைக்குப் புறம்பான —தவறுன அணுகுமுறையேயாகும். இம் முயற்சி எதிர் விளைவையே உருவாக்கி நாளடைவில் தேசிய இனங்களின் முன்னேற்றத்தின் தொடக்கப் படிகளிலேயே பொடிந்து போகும் என்பது இன வளர்ச்சியைப் பற்றிய அறிவியல் நெறியாகும்.

—குன்றன்

Scanned with CamScanner

(3-ஆம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் வழிபாட்டு வழக்கு வந்ததும், நடுவர் வழக்கைப் பற்றிய விளக்கங்களைக் கேட்டறிந்தார். உடனே பாவலரேறு அவர்கள் **'நடுவர் அவர்களே'** என தமிழில் தொடங்கினார். வரலாற்றில் இதுவரை இல்லாத தமிழ் முழக்கம் அறையைச் சூழ்ந்தது. அவ்வுரையை அடுத்து, நம் மொழி பெயர்ப்பாளர் வழக்கறிஞர் திரு. பொன்னழகன் அவர்கள் நடுவரிடம் வழக்குப் பற்றிச் சுருக்கமாக எடுத்துரைத்தார். அவர் கருத்துரையைக் கேட்ட எதிர் வழக்கறிஞர்கள், நம்மை இவ்வழக்கில் எதிர் வழக்காளராகப் போடக் கூடாது என்று கேட்டு, "இவ் வழக்கில் தம்மையும் ஓர் எதிர் வழக்காளராகச் சேர்க்க வேண்டும் என்று கேட்டிருப்பவர் மூன்று இதழ்களை நடத்தி வரும் ஆசிரியர். அவர் தமிழ் அறிஞராக இருக்கலாம். ஆனால் மத நடைமுறைகளைப் பற்றி அவருக்கு ஒன்றும் தெரியாது. எனவே அவர் கருத்துகளைக் கேட்டு ஆகப் போவது ஒன்றும் இருக்காது'' —என்று மூன்று வழக்கறிஞர்களும் ஒரே குரலில் நடுவரிடம் கூறினர்.

நம் மொழிபெயர்ப்பாளராக வந்திருந்த வழக்கறிஞர் உயர்திரு. பொன்னழகன் அவர்கள், நடுவரிடம் நம் கருத்துத் தேவையை அழுத்தமாக எடுத்துக் கூறியதையும் எதிர்தரப்பு வழக்கறிஞர்கள் ஒப்புக் கொள்ளாமல், இரண்டு மூன்று முறைகள் மறுக்கவே, மதிதகு நடுவர் *மிசரா* அவர்கள், அவர்களுக்குச் சரியான கருத்து விளக்கம் தரும் வகையில் தமக்கு ஏற்பட்ட ஒரு பட்டறிவு நிகழ்ச்சியைக் கீழ்வருமாறு கூறினார்.

"என் வாழ்வில் ஒரு முறை ஒரு நிகழ்ச்சி நடந்தது. நான் மலைப்பகுதி ஒன்றுக்கு ஒருகால் செல்ல நேர்ந்தது. அங்கு ஓரிடத்தில் ஒருவன் கட்கத்தில் ஒரு பொத்தகத்தை வைத்துக் கொண்டு, அதனை அடிக்கடி கைகளில் விரித்து அதிலிருந்து ஏதோ ஒரு பகுதியைப் படிக்கவும், அதைச் சுற்றியிருந்த மலைப்பகுதி மக்கள் மிக கவனமாகக் கேட்கவுமாக இருந்தனர். அவன் பேச்சு முடிவில், அவனிடம், அவர்கள் தங்களிடமிருந்த காசுகளில் சிலவற்றை எடுத்துக் கொடுத்தனர். அவற்றை அவன் வாங்கிக் கொண்டான். அவர்கள் எல்லாரும் அங்கிருந்து சென்ற பின் நான் அவனை அணுகி, அவன் வைத்திருந்தது என்ன பொத்தகம் என்றும், அதில் அவன் படித்தது எதைக் குறித்த கருத்துகள் என்றும் கேட்டேன்.

அதற்கவன், 'இந்தப் பொத்தகம் என்னதென்று எனக்குத் தெரியாது. இதிலிருந்து படித்துக் காட்டுவது போல், ஏதோ வாய்க்கு வந்ததை அவர்களிடம் கூறினேன். அவர்களுக்கும் நான் என்ன கூறினேன் என்பது தெரிய வாய்ப்பில்லை. ஏனென்றால் அவர்களுக்கு நான் பேசும் மொழி தெரியாது; அவர்கள் மொழியும் எனக்குத் தெரியாதாகையால் நானும் அவர்கள் மொழியில் பேச வாய்ப்பில்லை'' என்றான். இவன் இவ்வாறு நீண்ட காலமாக அவர்களை ஏமாற்றி வருகிறான்.

எனவே, கடவுளுக்கும் மாந்தனுக்கும் இடையில் மொழி வேறுபாடு இல்லை. இந்த நிலையில் எதிர் வழக்காளர் கருத்து என்ன என்பதைக் கேட்பதே நல்லது. ஆகவே நான் இவர்களை எதிர் வழக்காளர்களாக ஏற்றுக் கொள்கிறேன்'' என்று கூறிக் கட்டளையிட்டார்.

இந்திரா காந்தியின் சாம்பல் ஊர்வலம் தொடர்பாக, அவர் மறைவிற்குப் பின், சென்னை உயர் நெறி மன்றத்தில், அவ்வூர்வலத்தைத் தடை செய்யக் கோரி, பாவலரேறு தொடுத்த வழக்கில், அன்றைய நடுவர் மதிதகு. நடராசன், அதனை உசாவலுக்கே ஏற்றுக் கொள்ளாமல் தள்ளுபடி செய்ததை இந்நிலையில் ஒப்பிட்டுப் பார்த்தல் வேண்டும். அவர் அவ்வழக்கில் நடுவணரசுக்குச் சார்பாக எழுதிய தீர்ப்புரையே, அவர் பதவி உயர்வுக்குக் காரணமாகி, அவர் உச்ச நெறி மன்ற நடுவராக அமர்த்தப் பெற்றார் என்பதையும் அன்பர்கள் நினைவு கூர்தல் வேண்டும்.

ஆனால், அவர்போல் அல்லாமல், இவ்வழக்கில் உச்ச நெறி மன்ற நடுவர் மதிதகு. *அரங்கநாத மிசரா* நமக்குச் சார்பாக இவ்வழக்கைப் பார்ப்பன வழக்கறிஞர்களின் எதிர்ப்புகளையும் பொருட்படுத்தாமல் உசாவலுக்கு ஏற்றுக் கொண்டது குறிப்பிடத் தக்கது. அதுவேயு மன்றி, உயர்திரு. மிசரா அவர்கள் தமக்கு ஏற்பட்ட பட்டறிவு நிகழ்ச்சி ஒன்றைத் தக்க விடத்தில் தக்க முறையில் எடுத்துக் கூறியதும், இறை வழிபாட்டில் மொழிச்சிக்கலுக்கு இடமில்லை என்பதையும் சுட்டிக் காட்டியதும், அவரின் நடுநிலையான உள்ளத்தை நமக்குப் புலப்படுத்திக் காட்டுகின்ற செய்திகளாகும்.

எனவே, நமக்கு வெற்றி கிடைப்பது பகுதி உறுதியாகி விட்டது. ஆனால், பார்ப்பனர்கள் ஏதாவது சூழ்ச்சி செய்து, தமிழ் வழிபாடு நடைபெற விடக் கூடாது என்னும் கருத்தை வலியுறுத்துவதற்காகவும், பாவலரேறு வழக்கு தோல்வியுறவேண்டும் என்பதற் காகவும், அடுத்து உசாவலுக்கு வரும் வழக்கில் மதிதகு. *மிசரா* அவர்களை நடுவராக அமர விடாமல் எங்கு தடுத்து விடுவார்களோ, தெரியவில்லை. பொறுத்திருந்து பார்ப்போம்.

இவ்வழக்குத் தொடர்பான முன், பின் வரலாற்றுச் செய்திகள், தொடர்பான அனைத்துப் பெயர்களுடனும், பின்னர் விரிவாகவும் விளக்கமாகவும் நூல் வடிவாகவும் வரும் என்பதை அன்பர்களுக்குக் கூறிக் கொள்கிறோம்.

—*நம் சிறப்புச் செய்தியாளர்.*

Scanned with CamScanner

அறிவன் மடல்கள் :-

1. தேசிய இனவுணர்வு தளிர்க்கிற நேரம்...

'தேசியம்' பற்றிய வரைவுகள் ஒரு பக்கம் இருக்கட்டும். இன்று 'இந்தியா'வை ஏற்பதா, மறுப்பதா என்ற வினுக்களும் கூட ஒரு பால் கிடக்கட்டும். உண்மையான நிலவரங்களை எடுத்து வைத்துப் பார்ப்போம். அவற்றின் மீது நாம் எடுக்கும் முடிவுகளை மக்களிடம் கொண்டு செல்வோம். அதற்கான முன் முயற்சியாகப் பல்வேறு நிகழ்ச்சிகளினூடே வலைப்பின்னலாகிக் கிடக்கும் 'இந்தியத் தேசியம்', 'தேசிய இனங்களின் சிறைக் கூடம்' என்பது பற்றி ஆராய்வோம்!

'பலசமய, பலதேச், பலமொழிகளைக் கொண்ட இந்தியாவில்' இசுலாமியர் எழுப்பும் சிக்கல்கள்—

திரிபுராவில் மலைவாழ் மக்களின் 'எதிர் அரசு' அமைத்துச் செயல்படும் நிலைமை —

கூர்க்கா மக்களின் தனிமாநிலக் கோரிக்கை போன்ற பல்வேறு சூழ்நிலைகளைப் பார்க்கின்றோம்!

யாழ்ப்பாணத்தில் எரிநெய், பொருளியல் தடைகளால் இந்தியாவிற்கு ஏற்பட்டுள்ள நெருக்கடியை அரசு தீவிரமாக ஆராய்கிறது.

அசாமில் எரிநெய் (பெட்ரோல்) போக்குவரத்தினைத் தடைசெய்யக் கோரும் போராட்டம் இன்னும் காணக் கூடிய ஒன்ருகவே உள்ளது. மகந்தா முதல்வர் ஆனதால் அசாம் கிளர்ச்சி மட்டுப்பட்டு விடும் என்று போட்ட அரசின் கணக்கில் தவறு எங்கே எனத் தெரிந்து கொள்ளுதல் வேண்டும்.

இத் தேசிய இனங்களின் போரட்டங்கள் தேவைகள் புறக்கணிக்கக் கூடியவை அல்ல. அவைகளை அடக்கி ஒடுக்கும் அரசின் வகுப்புத் தன்மையை நோக்கினல், சிலவுண்மைகள் வெளிப்படுதல் இயலும்.

2. தமிழர்களுக்கு!

இந்திய முன்னள் வெளிநாட்டுத் துறைச் செயலர் ஏ.பி வெங்கடேசுவரன் 'இலங்கைத் தமிழர்' பற்றிக் கூறியுள்ளார். அப் பேச்சு 'இந்து' ஆங்கில இதழில் உள்ளது. அதன் சாரம்,

1. தென்னகங்களின் சிக்கல்களில் இந்திய அரசு ஆர்வம் காட்டுவதில்லை.

2. வடமாநிலங்களில் ஒரு சிக்கல் எனில் தாவிப்பாயும் இந்திய அரசு.

3. இலங்கைச் சிக்கலை நன்கறிந்து பார்த்த சாரதியை விலக்கியது இராசீவ் அரசின் தவருகும்.

4 உலகில் உள்ள தமிழர் அனைவரும் எழுச்சி பெறல் வேண்டும்.

5. அ. தி. மு க.வின் தீவிரக் குறைவுக்கு அது பேராயக்கட்சியுடன் கொண்ட உறவு ஒரு காரணம்.

6. முன்னேற்பாடு, திட்டவட்டமான முடிவு, தெளிவு இல்லாமை 'வெறும் பேச்சுரை'யைப் பயனற்றதாக்கி விடும்.

கடுமையான குற்றச்சாட்டுகளைக் கூறியுள்ள இப் பொறுப்பான செயலரின் கருத்துரைகளைத் தமிழர்கள் ஆழமாக எண்ணி உணர்தல் வேண்டும்.

இந்தக் கருத்துரைகளை அச்சிட்டுத் தமிழர் பேரவை - பரமக்குடி - வெளியிட முன்வந்துள்ளது. தமிழர்களிடம் விழிப்புணர்வு வேண்டும் என்ற நோக்கம் மறவர்கோவிடம் ஆர்வக் குமிழியிடுகிறது. வசந்தகுமார் அதற்குப் பெரிதும் ஆதரவாக உள்ளார்.

தமிழ்நாட்டில் உள்ள ஒற்றுமை ஆர்வலர்களிடம் பேருணர்ச்சி ஏற்படப் பாடுபடுவோம்.

'புதுயுகம் பிறக்கிறது, இதழ் 'சை. செளபா' வாங்கி அளித்தார். இவ் விதழ் தமிழர்க்கான அறிவெழுச்சியை வழங்கும் என நம்புவோம். அதனையும் ஆராய்ந்து ஏற்க இளைஞர்கள் முன்வருதல் வேண்டும்.

(4-ஆம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்கட்சி: (அ) - ஆளுங்கட்சிக்கு அடுத்த நிலையில் மக்களை விலைக்கு வாங்கி வெற்றியை நழுவ விட்ட கட்சி.

(ஆ) - மக்களின் மெலிவைக் கணக்கிடுவதில் மயிரிழையில் தவறவிட்ட கட்சி.

(இ) - ஆளுங்கட்சி எதைச் செய்தாலும் தவறு என்று ஒட்டு மொத்தமாகக் கூற வந்த கட்சி.

(ஈ) - ஆளுங்கட்சி அடிக்கடி தவறுவதைக் கண்டு மகிழும் கட்சி.

(உ) - வெளி நடப்பு நடக்கத் தெரிந்தவர்களை மட்டுமே கொண்ட கட்சி.

(ஊ)- தீர்மானம் என்ருலே நம்பிக்கையில்லாத் தீர்மானம் மட்டுமே தெரிந்த கட்சி.

(தொடரும்)

(2-ஆம் பக்கத் தொடர்ச்சி)

சமப்படுத்தித்தான் இவ்விருந்துணவு நடைபெறுகிறதாம். இவற்றை நடத்துவதன் மூலம்தான் சாதி வேறுபாடு, பொருளியல் வேறுபாடுகளை ஒழிக்க முடியும் என்பது அரசின் கொள்கையா?

எவ்வாருனாலும் இதை நடத்திப் பொதுப் பணத்தைச் செலவழிப்பதன் வழி, தங்களுக்கு ஒரு கணக்கைப் பிரித்துக் கொண்டால் சரி..... !

இந்த விடுதலை நாளில் நடத்தப் பெற்றது என்னவோ, இந்தியா விடுதலை பெற்று நாற்பதாண்டு ஆயினும் இது போன்ற விழாவை நடத்த வேண்டிய அளவிற்குக் கீழ்மையாகவே உள்ளது என்பதைக் குத்திக் காட்டுவதாகவே இருக்கிறது!

—நிலையன்.

Scanned with CamScanner

புகழ் குன்றுது எழுக!

(வண்ணப் பா)

வள்ளி கேள்வன்.

மலையில்மு கிழ்த்துப் பொலிந்த செந்தமிழ்
நறவமு திட்டுக் கலந்த செந்தமிழ்
வழுதிவ ளர்த்துப் புரந்த செந்தமிழ்
[தென்றல் போல

மனமகிழ் வித்துக் கனிந்த செந்தமிழ்
புலவர்அ கத்திற் பதிந்த செந்தமிழ்
வளர்திற மிக்குத் தழைந்த செந்தமிழ்
[அந்த நாளில்

கலைகள்ப டைத்துப் பரந்த செந்தமிழ்
அறிவிய லுக்குப் பொருந்து செந்தமிழ்
கடமைநி கழ்த்தச் செயுஞ்செ ழுந்தமிழ்
[இந்த நாளில்

கடைநிலை யுற்றுத் தளர்ந்த ழுந்தவும்
வடவர்பு குத்தத் திமிர்ந்த இந்தியும்
முதல்நிலை பெற்றுக் கிளர்ந்து பொங்குதல்
[நன்றுதாமோ?

புலி,கயல் வைத்துத் துணிந்தெ ழுந்தயல்
அகபவை செற்றுத் திறம்பெறும் புகழ்
புரவலர் பெற்றுச் சிலம்பொ ழுந்தமிழ்
[முந்துநூல்கள்

புலன்நுகர் வித்துப் பெரும்பொ லன்குவை
பரிசுகொடு டுத்திட் டறம்பு கன்றிடு
புலவர்மொ ழிக்குப் பணிந்த பண்பது
[குன்றிடாமல்

வலிமைபெ ருக்கிக் களம்ப யின்றுபல்
திறமை வளர்த்துத் தெளிந்த சிந்தையில்
வளர்முகம் உற்றிட் டொருங்கி ணைந்துயர்
[சொந்தநாடு

தனைமலர் விக்கச் சினங்கொ டின்றெழு!
உயிரும்அ ளிக்கத் துணிந்து வெங்களம்
மருவிமு னைப்புற் றிறங்கு, வண்டமிழ்
[மைந்தநீயே.

ஓர் அறிவிப்பு!

'தமிழ்நிலம்' புதிய வடிவில் கிழமைதோறும் வெளிவரவும் எல்லா வகையிலும் மேன்மேலும் இதன் பொலிவும் வலிவும் வனரவும் ஏற்பாடுகள் செய்யப் பெற்று வருகின்றன. நம் தமிழின மீட்புக்கு இதுவே சிறந்ததொரு வாளாகவும் கேடயமாகவும் திகழ்வதாகும். அனைத்து நிலைகளிலும் நம் அன்பர்கள் பெரிதும் உதவுவார்கள் என நம்புகின்றோம்.

அன்பர்கள் ஆங்காங்கு நடைபெறும் இயக்கச் செய்திகளையும், தமிழின விழிப்புத் தொடர்பான செய்திகளையும், இன மீட்புக் கட்டுரைகளையும் சுருக்கமாக எழுதி விடுக்க வேண்டுகிறோம்.

உ.த.மு.க. வின் உயர்ந்த கொள்கைகள்!
1) தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்!
2) சாதியற்ற, மத வேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்!
3) இழிவுகளும், பூசல்களும், ஏமாற்றும் இல்லாத அரசியல்!
4) தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்!
5) மனம், அறிவு, வாழ்க்கை இவற்றை வளப்படுத்தவும், நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி!
6) பழந்தமிழ் மரபுக்கும், மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்!
7) எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை!

சிந்தனைக்கு - 9

பொதுத்தொண்டு வெற்றிபெற உண்மை, நேர்மை, விடாமுயற்சி, ஊக்கம், ஒழுக்கம் ஆகியவை இணைந்து இயங்க வேண்டும்.

(ஒவ்வொரு வெள்ளிக்கிழமையன்றும் வெளிவரும்) இதழ் எண்- 90; TN/MS (C) 657

அனுப்புதல்:
தமிழ்நிலம்
5. அருணாசலத் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை-5

தொலைபேசி எண்: 847829

உறுப்பினர்:
ஆண்டுக் கட்டணம் உரு. 44-00
அரையாண்டுக் கட்டணம் உரு. 22-00

பெறுநர்: நூல் அஞ்சல்
திரு. / திருவாட்டி

ஆசிரியரும், வெளியிடுபவரும்: பாவலரேறு பெருஞ்சித்திரனார்,
அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம், 5, அருணாசலத் தெரு, சென்னை-5.

Scanned with CamScanner